# தூத்துக்குடி மாமன்றம்
# சாதாரணக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10. 00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I விதி எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தூத்துக்குடி மாநகராட்சி 05–08–2008ல் துவக்கி வைக்கப்பட்டது. இதற்காக தூத்துக்குடி மாநகராட்சி என அலுவலக முத்திரைகள் தமிழ், ஆங்கிலம் மற்றும் நாள் முத்திரை ஆகியவை செய்து வாங்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ 3500/–யை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு 1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று செயல்பட்டதையும் அங்கீகரிக்கலாம்.

பி1. 1788/08

**தீர்மானம் எண்: 2**

அலுவலகக் குறிப்பு **1** அனுமதிக்கப்பட்டது
அலுவலகக் குறிப்பு **2** அங்கீகரிக்கப்பட்டது.

2. தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாநகராட்சி புதிய கட்டிடம் கட்டப்படவுள்ள இந்நகராட்சி பழைய பேரூந்து நிலையம் அருகிலுள்ள மாட்டுப் பேட்டையிலுள்ள உபயோகப்படுத்தப்படாத பழைய பழுதடைந்த கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தி அதிலுள்ள மரச் சாமான்களை பொது ஏலத்தில் விட மன்றம் தனது தீர்மானம் எண் 402 நாள் 14–7–2008 ல் அனுமதிக்கப்பட்டதின்படி அவசர அவசியம் கருதி 18–7–2008 அன்று ஏலம் கோரப்பட்டதில் திரு கே. பழனியப்பன் என்பவர் உச்ச ஏலக் கேள்வியாக ரூ 4,44,500/– ஏலம் கோரியுள்ளார். மேற்படி கேள்வித்தொகையை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு 1) மேற்கண்ட தொகை நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ 350040/–யை விட அதிகமாக உள்ள காரணத்தினால் மேற்கண்ட ஏலத்தொகை ரூ 444500/–ஐ ஏற்கலாம்.

இ5. 18217/08

**தீர்மானம் எண்: 3**

அலுவலகக் குறிப்புப்படி ஏற்கப்பட்டது.

3. தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் கடந்த காலங்களில் பணிபுரிந்த சுமார் 700 பணியாளர்களுக்கு கடந்த 21 வருடங்களுக்கு அன்னார்களின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்த சேமநலநிதி சந்தா தொகைக்கு திண்டுக்கல் சாப்ட்வேர் தனியார் நிறுவனம் மூலம் தனி நபர் வட்டியை கணனி மூலம் கணக்கீடு செய்து அதன் நகல் வழங்கவும் உத்தேச செலவு ரூ 1,20,000/–க்கு மன்றத்தீர்மான எண் 179 நாள் 31–3–2008ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணியை 1984–85 முதல் 2006–07 முடிய மொத்தம் 23 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் தனித் தனியே தனி நபர் வட்டிக் கணக்கீடு செய்து அதற்காக 23 எண்ணங்கள் புத்தகம் தயார் செய்து கொடுத்த வகைக்கு ரூ 2,88,656/–ம் மென்பொருள் ரூ 5000/–ம் சேர்த்து ரூ 2,93,656/– ஐ வாங்க திண்டுக்கல் சாப்ட்வேர் நிறுவனத்திடம் இருந்து பில் வரப்பெற்றுள்ளது. ஆனால் மேற்படி பணிக்கு மன்றத் தீர்மான எண் 179 நாள் 31–3–2008ல் ரூ 1,20,000/–க்கு மட்டும் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே கூடுதல் செலவினம் மற்றும் இவ்வாண்டுகளின் நகராட்சிக்கு வரவேண்டிய தனி நபர் வட்டியை பெற முன்மொழிவு தயாரிக்க வேண்டியுள்ளதால் அதற்கான செலவினத்தொகையை சேமநலநிதி இருப்பு வட்டி கிடைக்கக்கூடிய தொகையிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

பி5. 17269/2007

**<u>தீர்மானம் எண்: 4</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

4. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான ஜெயராஜ் ரோடு வணிக வளாகத்தில் மாடி படி அருகில் 12 x8 அளவு காலி உள்ள இடத்தை ஆக்கிரமிப்பு ஏற்படாத வகையில் நகராட்சிக்கு வருவாயை பெருக்கும் நோக்கில் கடையாக மாற்றி மேற்படி கடையை பொது ஏல / ஒப்பந்தப்புள்ளி மூலம் வாடகை அடிப்படையில் மூன்றாண்டு குத்தகை அடிப்படையில் உரிமம் வழங்க நடவடிக்கை எடுக்க மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 11574/2006

**<u>தீர்மானம் எண்: 5</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

5. தூத்துக்குடி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் திரு சிங்கமணி என்பவர் உரிமம் பெற்ற பொருள் பாதுகாப்பு அறை முழுவதும் கடையாக மாற்றி அதற்கு அருகிலுள்ள கடை வாடகை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து உரிமம் நீடிக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண் 150 நாள் 31–3–2008ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன் பேரில் அருகிலுள்ள வாடகையை கணக்கிட்டு வாடகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1–7–2001 | மாத வாடகை | ரூ 6595/– |
| 1–7–2004 | மாத வாடகை | ரூ 7584/– |
| 1–7–2007 | மாத வாடகை | ரூ 8721/– |

அலுவலகக் குறிப்பு மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 50325/ 2001

**<u>தீர்மானம் எண்: 6</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

6. இம்மாநகராட்சிப் பகுதி போல்டன்புரம் 10 அடி ரோடு தொடர்ச்சியில் திரு வரதராஜன் மற்றும் 5 நபர்களால் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை மாநகராட்சி மூலம் அப்புறப்படுத்த நடவடிக்கை

எடுக்ககோரி இம்மாநகராட்சியை 1ம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற கிளை மதுரை உயர்நீதிமன்றத்தில் திரு பெருமாள் என்பவர் இம்மாநகரராட்சிக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு எண் W.P. (M.D) No. 5078/08 ல் இம்மாமன்ற உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு எஸ். கடற்கரை, பி.எஸ்சி, பி.எல்., அவர்கள் இம்மாமன்றம் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி இவ்வழக்கினை ஏற்று நடத்தவும் இவ்வழக்கு தொடர்பான செலவினங்களுக்கும் இம்மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு மாமன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் சி3. 23568/08

**<u>தீர்மானம் எண்: 7</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

7. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 2008ம் வருடத்திற்கு தேவையான பொது சுகாதார தளவாடச் சாமான்கள் வாங்க நகர் மன்ற தீர்மானம் எண்.186 நாள் 25-05-2008ல் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 27-05-2008ம் தேதியான்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இரண்டு நிறுவனங்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்ட விபரப்படி வழங்கியுள்ளனர்.

| வ.எண். | தளவாடச்சாமான்கள் விபரம் | மெஸ்ஸர்ஸ் எம்.எஸ். எண்டர்பிரைசஸ், 257, பெரிய தெரு, திருநெல்வேலி | மெஸ்ஸர்ஸ் கே. கனகசபாபதி முதலியார் சன்ஸ், 359, சுவாமி சன்னதி தெரு, தென்காசி. |
|---|---|---|---|
| 1 | பெரிய தூப்புமார் 6′ நீளமுள்ள பிரம்பு பிடியுடன் கூடியது | ரூ. 141/- | ரூ.135/- |
| 2 | இரும்பு பல் பிக்காஸ் - 5 முள் உள்ளது. மரகனையுடன் கூடியது (டாட்டா கம்பெனி) | ரூ. 348/- | ரூ. 339/- |
| 3 | மூங்கில் பிரம்பு 15 அடி நீளம் | ரூ. 261/- | ரூ. 249/- |
| 4 | கடப்பாறை 5′ 1″ அடி நீளம் உள்ளது (டாட்டா கம்பெனி | ரூ. 548/- | ரூ. 530/- |
| 5 | அரிவாள் 2 அடி நீளம் உரக்கு பட்டையில் | ரூ. 179/- | ரூ. 168/- |
| 6 | சவுள் ¾ × ¾ அளவுள்ள இரும்பு தகட்டில் 10′ நீளம் உள்ள இரும்பு கம்பியில் பொறுத்தியது | ரூ. 312/- | ரூ. 290/- |
| 7 | மன்வெட்டி கனையுடன் கூடியது (டாட்டா கம்பெனி) | ரூ. 259/- | ரூ. 247/- |
| 8 | கைவாரி20 கேஜ் 6″ நீளம் 6″ அகலம் உள்ள நாகதகட்டில் | ரூ. 57/- | ரூ. 48/- |
| 9 | கைபெறுக்குமார் உறுதியாக கட்டியது | ரூ.14-50/- | ரூ. 13/- |
| 10 | இரும்புச்சட்டி 16″ விட்டம் 1¼ கிலோ எடை உள்ளது | ரூ. 116/- | ரூ. 104/- |

| | | | |
|---|---|---|---|
| 11 | வாறுகால் கரண்டி - 4' நீளம் கட்டி மூங்கில் கைப்பிடியுடன் | ரூ. 58/- | ரூ. 47/- |
| 12 | நாகத்தகடு வாழி 11" உயரம் | ரூ.189/- | ரூ. 178/- |
| 13 | மூங்கில் பிரம்பு கூடை பெரியது | ரூ.179/- | ரூ. 168/- |
| 14 | ரோடு சுத்தம் செய்யும் பிரஸ் | ரூ. 138/- | ரூ. 128/. |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**ஆலுவலக குறிப்பு :**

மெஸ்ஸர்ஸ் கே. கனகசபாபதி முதலியார் சன்ஸ், தென்காசி நிறுவனம் கீழ்க்கண்ட தளவாடச்சாமான்களுக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளனர்.

1. பெரிய தூப்புமார் - ரூ. 135/-
2. இரும்பு பல் பிக்காஸ் - ரூ. 339/-
3. மூங்கில் பிரம்பு - ரூ. 249/-
4. கடப்பாரை - ரூ. 530/-
5. அரிவாள் - ரூ. 168/-
6. சவுள் - ரூ. 290/-
7. மண்வெட்டி - ரூ. 247/-
8. கைவாரி - ரூ. 48/-
9. கைபெருக்குமார் - ரூ. 13/-
10. இரும்பு சட்டி - ரூ. 104/-
11. வாறுகால் கரண்டி - ரூ. 178/-
12. நாகத்தகடு வாளி - ரூ. 178/-
13. மூங்கில் பிரம்பு கூடை - ரூ. 168/-
14. ரோடு சுத்தம் செய்யும் பிரஸ் - ரூ. 128/-

மேற்கண்ட விலைகள் வெளி சந்தை விலைக்கு சமமாக உள்ளதான என அறிக்கை பெற்றதில் இரும்பு பல் பிக்காஸ், பிரம்பு, கடப்பாறை, மண்வெட்டி ஆகியவை விலை அதிகமாக உள்ளதாக தெரிவித்ததை தொடர்ந்து ஒப்பந்ததாரர்களிடம் வெளிச்சந்தை விலைக்கான கீழ்க்கண்ட விலைக்கு ஒப்புதல் தரஇயலுமா என்று தெரிவிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விபரபப்படி வெளி சந்தை விலைக்கு நான்கு பொருட்களையும் தர சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளனர்.

1. மன்வெட்டி - ரூ. 160/-
2. கடப்பாறை - ரூ. 435/-
3. இரும்பு பல்பிக்காஸ் - ரூ. 235/-
4. பிரம்பு - ரூ. 180/-

எனவே மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளிகள் வெளிசந்தை விலைக்கு சமமாக இருப்பதால் குறைந்த விலைக்புள்ளிகள் கொடுத்தை அங்கீகரிக்கலாம்.

2. 05-08-2008ம் தேதியன்று இந்நகராட்சியினை மாநகராட்சியாக அறிவிக்கும் பொருட்டு மான்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வருகை தரயிருப்பதாலும், அதே தினத்தன்று பனிமயமாதா திருக்கோவில் தேர் திரவிழா நடைபெற இருப்பதாலும், பொது சுகாதார தளவாடச்சாமான்களின் அவர அவசியத்தை கருதி நடவடிக்கை எடுத்ததையும் அனுமதிக்கலாம்.

எச்1. 6490/2008

**தீர்மானம் எண்: 8**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

8. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 2008ம் வருடத்திற்கு தேவையான கிருமிநாசினி வாங்க நகர் மன்ற தீர்மானம் எண்.187 நாள் 25-04-2008ல் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 27-05-2008ம் தேதியான்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இரண்டு நிறுவனங்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்ட விபரப்படி வழங்கியுள்ளனர்.

| வ.எண். | தளவாடச்சாமான்கள் விபரம் | மெஸ்ஸர்ஸ் எம்..எஸ். எண்டர்பிரைசஸ், 257, பெரிய தெரு, திருநெல்வேலி | மெஸ்ஸர்ஸ் கே. கனகசபாபதி முதலியார் சன்ஸ், 359, சுவாமி சன்னதி தெரு, தென்காசி. |
|---|---|---|---|
| 1 | சுண்ணாம்புத் தூள் (ஒரு கிலோ) | ரூ. 3-90 | ரூ.4-23 |
| 2 | கருப்பு பினாயில் (25லிட்டர் கேன்) | ரூ. 865/- | ரூ. 890/- |
| 3 | பிளிச்சிங் பவுடர் (ஒரு கிலோ) | ரூ. 25-75 | ரூ. 24-50 |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1) மெஸ்ஸர்ஸ் கே. கனகசபாபதி முதலியார் சன்ஸ், தென்காசி நிறுவனம் கீழ்க்கண்ட கிருமிநாசினிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளனர்.

1. பிளிசிங் பவுடர் (1 கிலோ) - %. 24-50

மெஸ்ஸர்ஸ் எம். எஸ். எண்டர்பிரைசஸ், திருநெல்வேலி நிறுவனம் கீழ்க்கண்ட கிருமிநாசினிகளுக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளார்.

1. சுண்ணாம்புத் தூள் (1 கிலோ) – ரூ. 3–90

2. கருப்பு பினாயில் (25 லிட்டர் கேன்) – ரூ. 865/–

மேற்கண்ட விலைகள் வெளி சந்தை விலைக்கு சமமாக உள்ளதான என அறிக்கை பெற்றதில் சுண்ணாம்புத் தூள் விலை அதிகமாக உள்ளதாக தெரிவித்ததை தொடர்ந்து ஒப்பந்ததாரர்களிடம் வெளிச்சந்தை விலைக்கான கீழ்க்கண்ட விலைக்கு ஒப்புதல் தரஇயலுமா என்று தெரிவிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி வெளி சந்தை விலைக்கு நான்கு பொருட்களையும் தர சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளனர்.

1. சுண்ணாம்புத் தூள் (1 கிலோ) – ரூ. 2–90

எனவே மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளிகள் வெளிசந்தை விலைக்கு சமமாக இருப்பதால் குறைந்த விலைக்புள்ளிகள் கொடுத்தை அங்கீகரிக்கலாம்.

2. 05–08–2008ம் தேதியன்று இந்நகராட்சியினை மாநகராட்சியாக அறிவிக்கும் பொருட்டு மான்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வருகை தரயிருப்பதாலும், அதே தினத்தன்று பனிமயமாதா திருக்கோவில் தேர் திரவிழா நடைபெற இருப்பதாலும், அவசர அவசியத்தை கருதி கிருமிநாசினிகள் பெற நடவடிக்கை எடுத்ததையும் அங்கீகரிக்கலாம்.

**எச்.1 / 6489 / 2008**

**<u>தீர்மானம் எண்: 9</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அஙகீகரிக்கப்பட்டது

9. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 5–8–2008 அன்று தொடங்கி வைக்கப்பட இருந்த தூத்துக்குடி மாநகராட்சி தொடக்க விழா தொடர்பாக அனுமதி பெறாமல் சாலைகளை சேதப்படுத்தி அலங்கார வளைவுகள் மற்றும் டிஜிட்டல் போர்டுகள் அமைத்துள்ளதாகவும், பொதுமக்களுக்கு போக்குவரத்து இடையூறு ஏற்படும் இடத்தில் சாலைகளில் மின் கோபுரம் அமைத்துள்ளதாகவும், இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை தவிர்க்கும் பொருட்டு உடனடியாக தடையாணை விதிக்க கோரி திரு சுரேஷ்குமார் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற கிளை மதுரை உயர்நீதிமன்றத்தில் இம்மாநகராட்சியை 4ம் பிரதிவாதியாக சேர்த்து தாக்கல் செய்த வழக்கு எண் WP (M.P) No. 7114/08 வழக்கினை இம்மாமன்ற உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு எஸ். கடற்கரை பிஎஸ்சி பி.எல் அவர்களிடம் ஒப்படைக்கவும் மேற்படி வழக்கினை ஏற்று நடத்தவும் இவ்வழக்கிற்கான செலவுத்தொகைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மாமன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் சி3. 23570/08

**<u>தீர்மானம் எண்: 10</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

10. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 5–8–2008 அன்று தொடங்கி வைக்கப்பட்ட தூத்துக்குடி மாநகராட்சி தொடக்க விழா தொடர்பாக அமைக்கப்பட்டிருந்த விழா மேடைக்கு ரூ 81.00 இலட்சம் மக்கள் வரிபணத்திலிருந்து செலவு செய்வதாகவும் , உரிய அனுமதி பெறாமல் சாலைகளில் பழுது ஏற்படுத்தி அலங்கார வளைவுகள் மின் கோபுரங்கள் மற்றும் டிஜிட்டல் போர்டுகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இத்தகைய செயல்களால் பொதுமக்களுக்கு போக்குவரத்து இடையூறு ஏற்படும் நிலை உள்ளதாலும், இதனால் உடனடியாக தடை உத்திரவு பிறப்பிக்க கோரியும் திரு கோமதி ஆ. கணேசன் மற்றும் திரு ஆறுமுக நயினார் ஆகியோரால் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இம்மாநகராட்சியை 2ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு எண் I.A 984/08 In OS 376/08ல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். எனவே மேற்படி வழக்கினை இம்மாமன்ற வழக்கறிஞர் திரு எஸ். செல்வராஜ், பிஎஸ்சி, பிஎல்., அவர்களிடம் ஒப்படைக்கவும், வழக்கிற்கான செலவுத்தொகைக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு 1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் சி3. 23569/08

**<u>தீர்மானம் எண்: 11</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

11. இம்மாநகராட்சிப் பகுதி வார்டு 38ல் மேலபெரிய காட்டன் ரோட்டிலுள்ள திரு மகேந்திரன் மற்றும் இரு நபர்களுக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு செலுத்த வேண்டிய சொத்துவரியை நீதிமன்ற தீர்ப்புபடி காசோலை மூலம் அனுப்பி வைக்கப்பட்டதற்கு ரசீது வழங்க கோரி இம்மாநகராட்சிக்கு எதிராக மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் C. C. No. 27/06 என்ற வழக்கு எண்ணில் வழக்கு தாக்கல் செய்தனர்.

மேற்படி வழக்கு தொடர்பான 19–6–2008ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் பிரதிவாதி மாநகராட்சி வாதி கோரியபடி காசோலை மூலம் பெறப்பட்ட தொகைக்கு ரசீது வழடங்கவும் இதுவரை ரசீது வழங்கப்படாமலிருந்ததற்கு ஈட்டுத்தொகையாக ரூ 2000/–ஐ வாதிக்கு வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்வழக்கை ஏற்று நடத்திய இம்மாமன்ற உள்ளூர் வழக்கறிஞர் திரு என். செல்வராஜ், பிஎஸ்சி. பிஎல்., அவர்கள் தமது 14–7–2008ம் தேதிய தமது சட்டக் கருத்தில் மேற்படி நீதிமன்ற தீர்ப்பானது சட்டவிதிமுறைகளை முழுமையாக பரிசீலனை செய்யாமல் வழங்கப்பட்டுள்ளதாகவும், இத்தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்ய தகுதியாக உள்ள வழக்கு என்பதாலும், சென்னை மாநில நுகர்வோர்

நீதிமன்றத்தில் மேல் முறையீடு வழக்கு தாக்கல் செய்யவும் தெரிவிக்கப்பட்டதன் பேரில் மாமன்ற உயர்நிதிமன்ற வழக்கறிஞர் திரு எஸ். கடற்கரை பிஎஸ்சி. பிஎல்., அவர்கள் மூலம் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கும், மேற்படி வழக்கு செலவினமாக ரூ 4000/—ம் கோரியுள்ளதை வழக்கறிஞருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு 1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை அனுமதிக்கலாம்.

சி3. 21956/08

**<u>தீர்மானம் எண்: 12</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

12. இம்மாநகராட்சியின் கணனி பிரிவில் கூடுதல் கணனிகள் வரப்பெற்று உள்ளதற்கு ஏற்ப மின் வயரிங் பணிகள் மற்றும் மின் பாதுகாப்பு கருவி பொருத்த வேண்டியுள்ளது. மேலும் வருவாய் பிரிவில் கணனிகள் பொருத்த தேவையான மின் வயரிங் பணிகள் செய்ய வேண்டி உள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ 15,000/— க்கு அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு

அலுவலகப் பணிகள் நவீன மயமாக்க மின்சாதன பொருட்கள் பாதுகாப்பாக இயக்க இப்பணிகள் அவசியம் செய்யப்பட வேண்டியிருப்பதால் இதனை செய்து கொள்ளவும் இதற்கான செலவீனத்திற்கும் அனுமதி அளிக்கலாம்.

இ1. 8655/2008

**<u>தீர்மானம் எண்: 13</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது

13. இந்நகராட்சி வாகனங்கள் பராமரிப்பிற்கு ஆன செலவினத்திற்கு மன்றம் தனது தீர்மானம் எண் 387 நாள் 31—3—2007ல் அனுமதி அளித்துள்ளது குடிநீர் லாரி மற்றும் டம்பர் பிளேசர் வாகனத்திற்கான டயர்கள் ரீதிரெட் செய்யும் பணிக்கு 15—07—2008ல் விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1 | மெசர்ஸ் டீ.வி.எஸ். சுந்தரம் இண்டஸ்டீரிஸ் லிமிடெட்<br>176/4 திருவனந்தபுரம் சாலை, திருநெல்வேலி | 10. 00 .20 டயர் ரீதிரெட்டிங் சார்ஜ் ஒன்றுக்கு ரூ 3578<br>7.50 x 16 டயர் ரீதிரெட்டிங் சார்ஜ் ஒன்றுக்கு ரூ 1919/— |
| 2 | மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ், சிதம்பரநகர், தூத்துக்குடி | 10. 00 —20 டயர் ரீதிரெட்டிங் சார்ஜ் ஒன்றுக்கு ரூ 3850<br>7.50 x 16 டயர் ரீதிரெட்டிங் சார்ஜ் ஒன்றுக்கு ரூ 2010/— |
| 3 | மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ், கால்டுவெல் காலனி, தூத்துக்குடி | 10. 00 —20 டயர் ரீதிரெட்டிங் சார்ஜ் ஒன்றுக்கு ரூ 4000<br>7.50 x 16 டயர் ரீதிரெட்டிங் சார்ஜ் ஒன்றுக்கு ரூ 2150/— |

**அலுவலகக் குறிப்பு**

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் டயர்களின் வெவ்வேறு இனங்களுக்கு ரீதிரெட்டிங் செய்ய குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள TVS சுந்தரம் இண்டஸ்டிரிஸ் திருநெல்வேலி நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1. 487/2008

**<u>தீர்மானம் எண்: 14</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

14. இம்மாநகராட்சி கழிவுநீர் லாரி கூகூ 69– 5052ல் உள்ள டீசல் ஆயில் இன்ஜின் , மட்பம்பு பழுதுகள் நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான செலவீனத்திற்கு மன்றம் தனது தீர்மான எண் 387 நாள் 31–3–2007ல் அனுமதி அளித்துள்ளது. விலைப்புள்ளிகள் 3–6–2008ல் கோரியதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1 | மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ், கால்டுவெல் காலனி, தூத்துக்குடி | ரூ 10,600/– |
| 2 | மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் அண்ட் இஞ்சினியரிங் ஒர்க்ஸ், தூத்துக்குடி | ரூ 10,350/– |
| 3 | மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ், தூத்துக்குடி | ரூ 10,800/– |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மழை காலத்தில் முழு அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழுதுநீக்கம் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி ரூ 10,350/– கொடுத்துள்ள மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் அண்ட் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1. 5081/2008

**<u>தீர்மானம் எண்: 15</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

15. இந்நகர்ப் பகுதி வி.இ. ரோடு ரத்னா காலனியில் பொதுப்பாதை ஆக்கிரமிப்பு தொடர்பாக திரு டபிள்யூ. சுரேஷ் மற்றும் பலர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் S. A. No. 459/07 in AS No. 88/ 2004ல் மேல்முறையீடு வழக்கு தொடர்ந்துள்ளதை மேற்படி வழக்கில் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு கடற்கரை அவர்களை நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கி னை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஜி5. 25203/02

**<u>தீர்மானம் எண்: 16</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

16. இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் மலேரியா பணியாளராக பணிபுரிந்து 4–6–2003ல் காலமான எஸ். தம்பி என்பவரின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்த சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 1780/– மற்றும் வட்டி ரூ 639/– சேர்த்து ரூ 2419/–ஐ அன்னாரின் வாரிசுகளுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

எச்2. 21523/08

**<u>தீர்மானம் எண்: 17</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

17. இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30–6–2008ல் ஓய்வுபெற்ற திருமதி கருப்பி/வெள்ளையன் என்பவரது மாத ஊதியத்தில் ரூ 20/– வீதம் 148 மாதங்கள் பிடித்தம் செய்த சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2960/– வட்டி ரூ 2061/– மற்றும் பங்குத்தொகை ரூ 10,000/– ம் சேர்த்து ரூ 15,021/–ஐ அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : வழங்கலாம்.

எச்2. 20962/08

**<u>தீர்மானம் எண்: 18</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

18. இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31–7–2008ல் ஓய்வுபெற்ற திரு வேலு/பெரியவீரன் என்பவரின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்த சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2960/– வட்டி ரூ 2061/– மற்றும் பங்குத்தொகை ரூ 10,000/– ம் சேர்த்து ரூ 15,021/–ஐ அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

எச்2. 23254/08

**<u>தீர்மானம் எண்: 19</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

19. இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக ஓய்வுபெற்ற துப்புரவு பணியாளர் திருமதி சுடலியம்மாள்/சுடலை என்பவரின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்த சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2960/– வட்டி ரூ 2061/– மற்றும் பங்குத்தொகை ரூ 10,000/– ம் சேர்த்து ரூ 15,021/–ஐ அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

எச்2. 23443/08

**<u>தீர்மானம் எண்: 20</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

20. இம்மாநகராட்சியில் நிரந்தர தினக்கூலி பணியாளராக பணிபுரிந்து ( Turn Cock) பணியிடைக் காலத்தில் 3–6–2007ல் காலமான திரு ஜி. பால்ராஜ் அவர்களின் துணைவியாரும், வாரிசுதாரருமாகிய திருமதி பி. பிரேமா தன்னுடைய விண்ணப்பத்தில் தன்னுடைய கணவரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித்தொகையை வழங்குமாறு கோரியுள்ளார். இறப்பு நகல் மற்றும் வாரிசு நகல் சமர்ப்பித்துள்ளார்.

திரு ஜி. பால்ராஜ் (லேட்) அவர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2960/– வட்டி ரூ 8394/– அரசின் பங்குத்தொகை ரூ 10,000/– சேர்த்து மொத்தம் ரூ 21,354/– யை திருமதி பி. பிரேமா அவர்களுக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

இ2. 8498/2008

**<u>தீர்மானம் எண்: 21</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

21. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறையின் அரசாணை எண் 126 நாள் 18–5–1996 மற்றும் அரசாணை எண் 85 நாள் 25–5–1998ன்படி தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

கோயம்புத்தூருக்கு 2007–08ம் ஆண்டிற்கான ஆண்டு சந்தா தொகை ரூ 50,000/– செலுத்தப்பட வேண்டியுள்ளது.

மேற்படி அரசாணைப்படி கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு ஆண்டு சந்தா தொகை ரூ 50,000/– செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

சி1. 4418/07

**தீர்மானம் எண்: 22**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது

22. தூத்துக்குடி மாநகராட்சி ரோச் பூஙகாவினை பராமரிக்கும் உரிமம் திரு இ. பாஸ்கர் என்பவருக்கு 1–7–2006 முதல் மூன்று வருடத்திற்கு வருடா வருடம் மன்றத்தின் ஒப்புதலுடன் உரிமம் புதுப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் வழஙகப்பட்டது. திரு இ. பாஸ்கர் என்பவருக்கு 30–6–2008ல் இரண்டு வருட உரிமம் முடிவடைந்து விட்டதால் மூன்றாம் வருட உரிமம் காலமான 1–7–2008 முதல் 30–6–2009 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு உரிமம் நீடித்து கொடுப்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. சுற்றுலா துறை மூலம் ரோச் பூங்கா அழகுபடுத்தும் பணி நடைபெற உள்ளதால் அப்பணியின் போது ரோச் பூங்கா நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய வேண்டம் எனவும் அதற்குரிய இழப்பீடு ஏதும் கோரக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் 1–7–2008 முதல் 30–6–2009 முடிய உரிமம் நீடித்து கொடுக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பூங்காவின் பராமரிப்பில் மேலும் செம்மைப் படுத்தும் விதத்தில் இம்மாநகராட்சியின் நகரப் பொறியாளர், நகரமைப்புஅலுவலர் மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரின் ஆலோசனையின்படி பராமரிப்பு மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கலாம்.

அ16. 1977/2006

**தீர்மானம் எண்: 23**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

23. தூத்துக்குடி மாநகராட்சி கீழரதவீதி தொடர்ச்சியில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்டுள் கடைகள் மற்றும் திருமண மண்டபம் மூன்று வருடங்களாக ஏல/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் இதுவரை கோர முன்வரவில்லை. தற்போது கீழ்க்குறிப்பிட்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள் வைப்புத்தொகை மிகவும் அதிகமாக உள்ளது எனவும், அவற்றை குறைத்து நிர்ணயம் செய்யக்கோரி வரப்பெற்ற மனுக்களின் மீது முடிவு செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | வைப்புத்தொகை | கூடுதல் வைப்புத்தொகை |
|---|---|---|
| திருமண மண்டபம் | ரூ 50,000/– | ரூ 1,00,000/– |
| கடைகள் ( 3 முதல் 6) | ரூ 10,000/– | 12 மாத வாடகை |

**அலுவலகக் குறிப்பு**

மூன்று வருடங்களாக பலமுறை ஏலம் நடத்தியும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும் எவரும் ஏலத்திலோ ஒப்பந்தப்புள்ளி அளிக்கவோ முன்வரவில்லை. மேன்மேலும் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை தவிர்க்கவும், கட்டிடங்கள் பூட்டிக் கிடப்பதால் பயனற்ற நிலையில் இருப்பதை பயன்பாட்டிற்குகொண்டு வர வேண்டியுள்ளதால் வைப்புத்தொகை குறைப்பது பற்றி பரிசீலிக்கலாம்.

அ16. 11574/2006

**தீர்மானம் எண்: 24**

கீழ்க்கண்டவாறு வைப்புத்தொகை நிர்ணயிக்கப்பட்டது

| | வைப்புத்தொகை | கூடுதல் வைப்புத் தொகை |
|---|---|---|
| திருமண மண்டபம் | ரூ.50000/– | இல்லை |
| கடைகள் (3 முதல் 6) | ரூ. 5000/– | 6 மாத வாடகை |

24. இம்மாநகராட்சி ஆணையர் அவர்கள் இமாச்சல பிரதேசத்தில் நடைபெற்ற சுவர்ண ஜெயந்தி திட்டத்திற்குரிய ஆணையருக்கான பயிற்சியில் கலந்து கொண்டதற்காக அவசர அவசியம் கருதி விமானப் பயணம் மேற்கொண்டதற்கு பயணப்பட்டியல் தொகை ரூ 23,980/– வழங்க மன்ற ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மாமன்றம் அனுமதிக்கலாம்.

பி4. 23726/08

**தீர்மானம் எண்: 25**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

25. இந்நகராட்சி வார்டு எண் 11, பூபாலராயர்புரம் தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு பொது நிதியில் செய்ய 20–8–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு கே.வி மாரியப்பன் | மதிப்பீட்டிற்கு ரூ 0.50% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு கே. சதா | மதிப்பீட்டிற்கு ரூ 14.70% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 379 நாள் 30–6–2008 ல் ரூ 30,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.50% குறைவானதுமான திரு கே.வி மாரியப்பன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 36/2007–08

**தீர்மானம் எண்: 26**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

26. இந்நகராட்சி வார்டு எண் 11, பூபாலராயர்புரம் 4வது தெருவில் கழிவுநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி பொது நிதியின் கீழ் செய்ய 16–7–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு கே.வி மாரியப்பன் | மதிப்பீட்டிற்கு ரூ 0.08% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு கே. சதா | மதிப்பீட்டிற்கு ரூ 1.70% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 281 நாள் 29–5–2008 ல் ரூ 80,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.08% குறைவானதுமான திரு கே.வி மாரியப்பன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 2/2008–09

**தீர்மானம் எண்: 27**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

27. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை அரசாணை (இருபதாண்டு) எண் 109 நாள் 1–8–2008ல் வணக்கத்திற்குரிய மேயர் துணை மேயர் மற்றும் அலுவலர்களுக்கு 6 வாகனம் வாங்க ரூ 57.00 இலட்சம் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக ஸ்கார் பியோ வாகனம் 3 எண்ணம் ( மகேந்திரா & மகேந்திரா வாஙகவும்) வாகனம் ஒன்றின் விலை ரூ 9. 00 இலட்சம் வீதம் ( வாகனம் விலை + இன்சூரன்ஸ் + சாலைவரி + பதிவு எண் ) 3 வாகனம் வாங்க ஆகும் உத்தேச செலவு ரூ 27. 00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மாமன்றம் அனுமதிக்கலாம்

இ1. 18217/2008

**தீர்மானம் எண்: 28**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

28. இந்நகராட்சிப் பராமரிப்பிலுள்ள 20வது வார்டு பனிமயநகர் பகுதியில்சிறுபாலம் கட்டுதல் மற்றும் மழைநீர் வடிகால் உயர்த்தி கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ4,50,000/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்

மபஎண் 28/2008–09

**தீர்மானம் எண்: 29**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

29. இந்நகராட்சி அலுவலகத்திலுள்ள நகர் நல அலுவலர் அறையில் புதியதாக மின் விளக்குகள் அமைக்கவும் அறையின் தளத்தில் டைல்ஸ் பதிக்கும் பணி புதியதாக அலுமினிய தடுப்பு மற்றும் கதவுகள் மற்றும் புதிய மர அலமாரி அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 1,65,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மாமன்றம் அனுமதி வழங்கலாம்

மபஎண் 56/2008–09

**தீர்மானம் எண்: 30**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

30. இந்நகர் பாளையங்கோட்டை சாலை மற்றும் ஜெயராஜ் சாலை சந்திக்கும் இடத்திலுள்ள நகராட்சி வண்டிப்பேட்டை இடத்தில் தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சி தரம் உயர்த்தியதை குறித்து நினைவுத்தூண் அமைக்கப்பட உள்ளதால் அங்குள்ள நகராட்சி சைக்கிள் நிறுத்துமிடத்தை ஜெயராஜ் சாலையில் உள்ள நகராட்சி இடத்தில் மாற்றியமைப்பதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 2,35,000/– க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அ.னுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> மாமன்றம் அனுமதி வழங்கலாம்

மபஎண் 58/2008–09

**<u>தீர்மானம் எண்: 31</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

31. தூத்துக்குடி மாநகராட்சியின் சேவைகளை துரிதப்படுத்த அத்தியாவசியப் பணியாளர்களுக்கு கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனம் வழஙகிட மன்றத்தால் அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. அரசும் தனது ஆணை எண் 109 நாள் 01–08–2008ல் ரூ 10. 00 இலட்சத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி 25–07–08ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு நிறுவனஙகளில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | |
|---|---|
| 1. மெசர்ஸ் விலிங் சிஸ்டம்<br>100 மகாபலிபுரம்<br>மெயின் ரோடு, சென்னை–34 | இந்திய அரசின் அனுமதி சான்று<br>இணைத்துள்ளனர்<br>மதிப்பீட்டை விட 11. 1 சதவீதம் குறைவு |
| 2. மெசர்ஸ் லிங்வெல் எலக்ட்ரானிக்ஸ் (பி) லிமிடெட்<br>2–3–76 முதல் தளம்<br>தவாய்புறா தார்பண்ட், செகந்திராபாத்–09 | மதிப்பீட்டை விட 5. 6 சதவீதம்<br>குறைவு |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. இரு நிறுவனத்தினரும் டேவணித்தொகை செலுத்தி உள்ளனர்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மெசர்ஸ் வி. லிசிஸ்டம் சென்னை நிறுவனத்தினர் கொடுத்துள்ளதை ஏற்று அனுமதிக்கலாம்.
3. மேலும் மேற்கண்ட பணி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 10.00 இலட்சம் மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1. 18217/2008

**<u>தீர்மானம் எண்: 32</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

32. தூத்துக்குடி நகராட்சி கதவு எண் 9, வாலையானந்தசாமி கோவில் தெருவில் அனுமதியின்றி கட்டுமானம் கட்டிய வகைக்கு நகராட்சி மூலம் தொடரப்பட்ட STC 3809/05 வழக்கின் தீர்ப்பை எதிர்த்து நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட மேல்முறையீடு வழக்கு எண் CA 80./08யின் கீழ் Principle sessions Court திரு அண்ணாமலை என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் திரு என். செல்வராஜ் மாமன்ற நகராட்சி வழக்கறிஞர் அவர்கள் எதிர் வழக்காடவும், மாநகராட்சி சார்பாக ஆஜராகவும் மற்றும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக் குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம்

ஜி2. UAC/89/05

**<u>தீர்மானம் எண்: 33</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

33. இம்மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பில் துறைமூலம் 16 வார்டுகள் தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதன் விபரம் வருமாறு.

40 வாட்ஸ் குழல் விளக்குகள் ..2037
சோடியம் ஆவி விளக்குகள் .. 209 ஆக மொத்தம் 2246 ஆகும் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்படி மின்சாதனப் பொருட்கள் ஒரு ஆண்டு பராமரிப்பிற்கு வாஙகிட ரூ 10. 50 இலட்சம் ஆகும். செலவீனத்தொகை ரூ 10. 50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

35 வார்டுகள் தனியார் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றது. இதன் விபரம் வருமாறு
40 வாட்ஸ் குழல் விளக்குகள் ..4601
சோடியம் ஆவி விளக்குகள் .. 800
150 வாட்ஸ் மெர்குரி ஆவி விளக்குகள் .. 74

உயர்மின் கோபுர விளக்குகள் .. 2 என மொத்தம் 5477 ஆகும். மேலும் நடப்பாண்டில் மேற்படி வார்டுகளில் புதியதாக பொருத்தப்பட்டுள்ள குழல் விளக்குகள் எண்ணிக்கை 70 ஆகும். இதனையும் சேர்த்து ஓராண்டு கால பராமரிப்பு (காலம் 17–09–2008 முதல் 16–09–2009 வரை) தொகை ரூ 22. 00 இலட்சம் ஆகும். இதற்கான செலவீனத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. மூன்றாண்டு கால பராமரிப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இந்நகர்மன்ற தீர்மானம் எண் 1015 நாள் 14–09–2006ன்படி முதல் ஆண்டு பராமரிப்பிற்கு அனுமதிக்கப்பட்டு அடுத்த இரண்டாண்டு காலம் இவ் உரிமத்தை மன்ற அனுமதியுடன் புதுப்பித்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. தற்போது இரண்டு ஆண்டு காலம் தெரு விளக்கினை பராமரித்து வரும் மெசர்ஸ் சுதா இஞ்சினியரிங் நிறுவனத்தின் பணிகள் திருப்திகரமாக இருந்து வருவதால் எஞ்சிய ஓராண்டு காலம் மேற்படி நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.
<u>அலுவலகக் குறிப்பு</u> மன்றம் அனுமதி அளிக்கலாம்

இ3.23185/2008

**<u>தீர்மானம் எண்: 34</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது

34. தமிழ்நாடு அரசாணை எண் 137, நாள் 29–7–2008ன்படி தூத்துக்குடி நகராட்சியானது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. எனவே இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்த சேமநலநிதி சந்தா தொகையை சம்பந்தப்பட்ட பணியாளர்களின் வேண்டுகோள்படி சேமநலநிதியில் இருந்து 6 மாதத்திற்கு ஒரு முறை முன்பணம் வழங்கவும் மற்றும் ஒரு வருடத்திற்கு ஒரு முறை பகுதி இறுதியாக வழங்கவும் அதற்கான அதிகார அளிப்பை மாநகராட்சி ஆணையருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> மாமன்றம் ஆணையர் அவர்களுக்கு அதிகார அளிப்பு வழங்கலாம்.

பி5. 24223/08

**<u>தீர்மானம் எண்: 35</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஆணையர் அவர்களுக்கு அதிகார அளிப்பு வழங்கப்பட்டது.

35. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான வல்லநாடு தலைமை நீர் பணியிடத்தில் புதிய திட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள 170 கு.வேக மின் மோட்டார் அறையில் உள்ள பழுதாகி உள்ள 800 ஆம்ஸ் ACB (Air circuit breaker) எனும் மின் பாதுகாப்புச் சாதனத்திற்கு பதிலாக மேம்படுத்தப்பட்ட நவீன தொழிற் நுட்பத்துடன் கூடிய 1000 ஆம்ஸ் ACB எனும் மின் பாதுகாப்புச் சாதனம் பொருத்தி இயக்கித் தரும் பணிக்கு 23–7–2008 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு

ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. அவைகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விபரம் |
|---|---|---|
| 1 | மெசர்ஸ் ரோக்கால் அன்கோ, மதுரை–1 | மதிப்பீட்டை விட 0.92% குறைவு டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | மெசர்ஸ் எலக்ட்ரிக்கல் டெலிமீட்டர்ஸ் அன் இன்ஜினியரிங கம்பெனி மதுரை–3 | மதிப்பீட்டை விட 4.2% கூடுதல் டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u> 1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0. 92% குறைவானதுமான மெசர்ஸ் ரோக்கால் அன்கோ மதுரை 1 எனும் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகை ரூ 2. 00 இலட்சம் மன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 21071/08

**<u>தீர்மானம் எண்: 36</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

36. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழைய திட்டத்தில்உ ள்ள தற்போது இயக்கிட உத்தேசித்துள்ள 175 கு.வேக பழைய மின் மோட்டார்கள் இரண்டு எண்ணம் காயில் புதுப்பித்து இதர பழுதுகள் சரிசெய்து இயக்கித் தரும் பணிக்கு 23–7–08 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. அவைகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விபரம் |
|---|---|---|
| 1 | மெசர்ஸ் ஜாய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ், தூத்துக்குடி–2 | ரூ 1,24, 500/– டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | மெசர்ஸ் அசோக் எலக்ட்ரிக்கல் அன்ட் இன்ஜினியரிங ஒர்க்ஸ், மதுரை–2 | ரூ 1,30,500/– டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u> 1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும், மதிப்பீடு விகிதத்திற்கு 0. 4% குறைவானதுமான மெசர்ஸ் ஜாய் எலக்ட்ரிகல்ஸ் ஒர்க்ஸ் , தூத்துக்குடி எனும் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மன்றம் தனது தீர்மான எண் 318 நாள் 30–6–2008ம் தேதியில் ரூ. 1,25,000/– அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இ3. 012749/08

**<u>தீர்மானம் எண்: 37</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**37.** இந்நகராட்சி பகுதியில் உள்ள 51 வார்டுகளில், 20 வார்டுகள், 5 வார்டுகள் வீதம் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு நகர் மன்ற தீர்மானம் எண். 186 நாள் 21–03–2007 ன் படி மூன்று வருடங்களுக்கு தனியார் மூலம் குப்பை அள்ளும் பணிக்கு ஒப்பந்ததாரர்கள் நியமனம் செய்யவும்,

ஒவ்வொரு வருடமும் அவர்களின் பணி திறன் அடிப்படையில் மன்ற அனுமதி பெற்று ஒப்பந்ததைத்தை புதுப்பித்துக் கொள்ளவும் அனுமதி வழங்கியுள்ளது. மன்ற தீர்மானம் எண். 380 நாள் 22–06–2007ன் படி கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு 16–07.2007 முதல் ஒரு வருடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு 15–07–2008,மமமம+ம் தேதியுடன் ஒருவருட பணி நிறைவு பெற உள்ளது. எனவே கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தத்தை அதே ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் மேலும் ஒரு வருடத்திற்கு 16–07–08 முதல் 15–07–09 வரை அனுமதித்து உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. மண்டலம் – 1 (வார்டுகள் 10, 11, 12, 13, மற்றும் 14)

   திருமதி எஸ்.கே.செல்வி, 73/9இ/3, போல்பேட்டை, தூத்துக்குடி
   ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 641/– (ரூபாய் அறுநூற்றி நாற்பத்தி ஒன்றுமட்டும்)

2. மண்டலம் – 2 (வார்டுகள் 46, 47, 48, 49 மற்றும் 50)
   திருமதி ஏ. விக்டோரியா, 122, எட்டையாபுரம் ரோடு, தூத்துக்குடி
   ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 706/– (ரூபாய் எழுநூற்றி ஆறு மட்டும்)

3. மண்டலம் – 3 (வார்டுகள் 19, 20, 29, 30 மற்றும் 31)
   திருமதி ஏ. விக்டோரியா, 122, எட்டையாபுரம் ரோடு, தூத்துக்குடி
   ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 694/– (ரூபாய் அறுநூற்றி தொன்னூற்றி நான்கு மட்டும்)

4. மண்டலம் – 4 (வார்டுகள் 41, 42, 44, 45, மற்றும் 51)

   திருமதி எஸ்.கே.செல்வி, 73/9இ/3, போல்பேட்டை, தூத்துக்குடி
   ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 694/– (ரூபாய் அறுநூற்றி தொன்னூற்றி நான்கு மட்டும்)

**அலுவலக குறிப்பு :**

கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் ஒரு வருடத்திற்கு **16–**07–2008 முதல் 15–07–2009 வரை நீடித்துக்கொள்ள அனுமதிக்கலாம்.

நிபந்தனை

ஒரு மண்டலத்திற்காக ஒதுக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களை வேறு மண்டலத்தின் துப்புரவு பணிக்கு பயன்படுத்தக்கூடாது. அந்தந்த மண்டலத்தில் தனித் தனியே துப்புரவு பணியாளர்களின் வருகைப் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.

எச்1. 2540/2007

**தீர்மானம் எண்: 38**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

38. தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டவுடன் அம்பாசிடர்வாகனத்தில் மேயர் பித்தளை போர்டு, சுழல் விளக்கு ஹாரன் மற்றும் இதனுடன் இணைந்த பணிகள் செய்து தர 01–08–08ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்று உள்ளது, இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1 | மெசர்ஸ், ஆர்.என்.ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ் . தூத்துக்குடி | 15,800 |
| 2 | மெசர்ஸ் அய்யனார் ஆட்டோ மொபைல்ஸ் .தூத்துக்குடி | 16,700 |
| 3 | மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ், தூத்துக்குடி | 17,400 |

**அலுவலகக் குறிப்பு**

1) பணியின் அவசியம் கருதி செலவினத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

2) குறைந்த விலைப்புள்ளியாக ரூ 15,800 கொடுத்துள்ள மெசர்ஸ் ஆர்,என்,ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

ந.க.எண். 22780/இ1/2008

**தீர்மானம் எண்: 39**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

39. இம்மாநகராட்சிப் பகுதியில் 41வது வார்டில் அமைந்துள்ள அண்ணாநகர் 12 மற்றும் மகிழ்ச்சிபுரம் பகுதிகளில் இரண்டு சிறு பாலங்கள் முழுவதும் சேதமடைந்து போக்குவரத்து செல்ல இயலாத நிலை உள்ளது. மேற்கண்ட இடத்தில் புதிதாக சிறுபாலம் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 90,000/–க்கு மாமன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண். 68/2008–09

**தீர்மானம் எண்: 40**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது

40. இம்மாநகராட்சியில் பராமரிப்பில் உள்ள 41வது வார்டில் உள்ள அண்ணாநகர் 7,8,9 மங்களாபுரம் மகிழ்ச்சிபுரம் பகுதிகளில் சேதமடைந்துள்ள தற்காலிக கிராவல் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 1,10,000/– க்கு மாமன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண். 69/2008–09

**தீர்மானம் எண்: 41**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது

41. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 38714/2008/ஆர்1 நாள் 13–08–2008 மாமன்றத்தில் பார்வைக்கு பதிலிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்படி சுற்றறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அரசாணை எண் 11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 12–01–1999ன் படி இம்மாநகராட்சிக்குட்பட்ட அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்கள், தனியார் நிறுவனங்கள் விளம்பர ஸ்தலங்கள் ஆகியவற்றிற்கு கீழ்க்கண்ட விபரப்படி 1–10–1998 முதல் நகர்மன்றத்தால் தொழில் வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| அரையாண்டு வருமான வரம்பு | அரையாண்டு தொழில் வரி |
|---|---|
| 1) ரூ. 200000/– வரை | இல்லை |
| 2) ரூ. 20001/– முதல் ரூ 30000/– வரை | ரூ. 75/– |
| 3) ரூ. 30001/– முதல் ரூ 45000/–வரை | ரூ, 190/– |
| 4) ரூ, 45001/– முதல் ரூ 60000/– வரை | ரூ. 375/– |
| 5) ரூ. 600001/– முதல் ரூ 75000/– வரை | ரூ, 565/– |
| 6) ரூ. 75001/–ம் அதற்கு மேல் | ரூ. 750/– |

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மேற்படி சுற்றறிக்கையில் 1–10–2008 முதல் வருமான வரம்பு விகிதத்தை மாற்றம் செய்யாமல் எற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அரையாண்டு தொழில் வரியில் 25ரூ க்கு குறையாமலும் 35ரூ க்கு மிகாமலும் உயர்வு செய்து நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கம் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்படி வரி உயர்வு விபரத்தை விளம்பரம் செய்யவும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) சுற்றறிக்கை பதிவு செய்யலாம்,

2) மேற்படி சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி ஆண்டு வருமான வரம்பு விகிதத்தை மாற்றம் செய்யாமல் எற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொழில் வரியில் 25ரூ க்கு குறையாமலும் 35ரூ க்கு மிகாமலும் உயர்வு செய்து நிர்ணயம் செய்யலாம்.

அ15–24317/08

**தீர்மானம் எண்: 42**

அலுவலகக் குறிப்பு **1** பதிவு செய்யப்பட்டது
அலுவலகக் குறிப்பு **2**இல் குறிப்பிட்டுள்ளபடி ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொழில்வரியில் **25%** உயர்வு செய்யவும், விளம்பரம் செய்வதற்கான செலவினத்திற்கும் அனுமதி வழஙகப்பட்டது.

42. இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூங்கா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 40 கு,வே. திறன் பம்ப்பில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்ய 23–07–2008ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனத்தாரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது, பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலை விபரம் | ஏபிசி,எலக்ட்ரிக்கல்ஸ்அண்ட் பிளம்பிங் மெட்டிரியல்ஸ், தூத்துக்குடி | ஜாய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ் |
|---|---|---|---|
| 1. | இராஜாஜி பூங்கா நீரேற்று நிலைய 40 கு.வேக திறன் பம்ப் பழுது நீக்கம் பணி | ரூ. 26000/– | ரூ. 26300/– |

**அலுவலகக் குறிப்பு–** பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் எபிசி எலக்ட்ரிக்கல்ஸ் அண்ட் பிளம்பிங் மெட்டிரியல்ஸ், தூத்துக்குடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம். மேலும் மேற்கண்ட மதிப்பீடு தொகைக்கு உள்ளூர் மார்கட் நிலவத்தை ஒத்துள்ளதாலும் இதனை மன்றம் ஒப்புதலளிக்கலாம்.

இ3. 018543/2008

**தீர்மானம் எண்: 43**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

43. இந்நகராட்சிக்கு சொந்தமான சத்திரம் தெருகழிவு நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 15 கு.வே. திறன் பம்ப்பில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்ய 23–07–2008ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனத்தாரிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலை விபரம் | ஏபிசி,எலக்ட்ரிக்கல்ஸ்அண்ட் பிளம்பிங் மெட்டிரியல்ஸ், தூத்துக்குடி | ஜாய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ் |
|---|---|---|---|
| 1. | சத்திரம் தெருகழிவு நீரேற்று நிலைய 15 கு.வேக திறன் பம்ப் பழுது நீக்கம் பணி | ரூ. 49500/– | ரூ. 53000/– |

**அலுவலகக் குறிப்பு–** பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஏபிசி எலக்ட்ரிக்கல்ஸ் அண்ட் பிளம்பிங் மெட்டிரியல்ஸ், தூத்துக்குடி ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம். மேலும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட குறைவாகவும் உள்ளூர் மார்கட் நிலவரத்தை ஒத்துள்ளதாலும் இதனை மன்றம் ஒப்புதலளிக்கலாம்.

இ3–018542/08

**தீர்மானம் எண்: 44**

அலுவலகக் குறிப்புப்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

44. தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாயில் உடைப்பு ஏற்பட்டு அதனை சரி செய்வதற்கு மண்தோண்டும் பணியாளர்கள் அலுவலகத்தில் இல்லாததினால் மண்தோண்டும் ஒப்பந்ததாரர் மூலம் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 50000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்

ம.ப.எண். 87/08/09

**<u>தீர்மானம் எண்: 45</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

45. இம்மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள 49வது வார்டில் அமைந்துள்ள மாரியம்மாள்கோவில் திருவிழாவினை முன்னிட்டு கோவில் சப்பரபவனி நடைபெறவிருக்கிறது, மேற்கண்ட பிரையண்ட்நகர் 6வது தெரு மற்றும் மெயின் தெருக்களில் கோவில் சப்பரம் செல்ல ஏதுவாக பழுதடைந்த சாலைகளை சரள் அமைத்து சீர் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 76,000/–க்கு மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண்.75/08–09

**<u>தீர்மானம் எண்: 46</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது

46. இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள விக்டோரியா சாலை மற்றும் தெற்கு காட்டன் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் உயர்த்தி கட்டுதல் சிறுபாலம் கட்டுதல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 755000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்

ம.ப.எண் 18/08–09

**<u>தீர்மானம் எண்: 47</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது

47. இம்மாந்கராட்சியில் 25வது வார்டில் உள்ள பத்திரகாளியம்மன் கோவில் தெருவில் உள்ள மக்களுக்கு குடிநீர் கிடைக்க அவசரம் அவசியம் கருதி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 80000/–க்கு மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண்.88/ 08–09

**<u>தீர்மானம் எண்: 48</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது

48. இம்மாநகராட்சியில் உள்ள 2வது வார்டில் கூஆஊ காலனியில் உள்ள பழுதடைந்துள்ள கிணற்றினை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 20000/– மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண். 66/ 08–09

**<u>தீர்மானம் எண்: 49</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது

49. இம்மாநகராட்சியில் 18வது வார்டு பகுதியில் அமைந்துள்ள வாடித்தெருவில் வடிகால் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் சாலைகள் அமைத்து தருவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 660000/– மாமன்றம் அனுமதி வேண்ட்ப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண்.67/08–09

**<u>தீர்மானம் எண்: 50</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது

50. தூத்துக்குடி மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள ஜாஜ்ரோடு பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி போக்குவரத்து செல்ல இயலாமலும் பொதுமக்கள் நடந்து செல்ல இயலாநிலை உள்ள மேற்கண்ட சாலையில் வடபுறம் புதிதாக வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 18,10,000/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ம.ப.எண்84/2008–09

**<u>தீர்மானம் எண்: 51</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது

மாமன்றம், தூத்துக்குடி.
நாள் 22–08–2008

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி.